# ஸ்ரீரங்கம் என்னும் அயோத்தி

அன்பர்களே!

எனக்கு மிகவும் தெளிவாக ஞாபகம் இருக்கிறது,நான்கு வயது முதற்கொண்டு ஸ்ரீரங்கநாதரின் பெயரும் உருவமும் எனக்குப் பரிட்சயம் ஆனது.என் அம்மாவின் அத்தை வீட்டுக்குப் போக எனக்கு மிக மிகப்பிடிக்கும்.காரணம் ,அங்கே பெரிய மரபீரோவில் அடுக்கி வைக்கப் பட்ட மண்பொம்மைகள்.காலங்காலமாக கொலுவைக்கும் வழக்கம் அவர்களுக்கு இருந்தது.அதனால் பல இறைவடிவங்கள் பொம்மைகளாக இருக்கும்.குறிப்பாக பெரிய கம்பீர கணபதி,போர்சிலின் சிவன்,பெரிய ரங்கநாதர் மூன்றும் என் இஷ்டமான பொம்மைகள்.

பல ஆண்டுகள் கழித்து என் பெற்றோர்க்கு நான் பிறந்ததால்,எனக்கு அதீத செல்லம்.நான் விடுமுறையில் வருவதை எதிர்பார்த்து அன்பு மழை பொழியும் என் தாத்தாக்களும்,பாட்டிகளும்,மாமா---அத்தைகளும் எனக்கு அன்று தந்த சுதந்திரமே என்னை இன்று வாழ்க்கையில் மகிழ்ச்சியாக வாழவைத்துள்ளது.குறிப்பாக என் அம்மாவின் பாட்டியே எனக்கு முதல் ஆன்மீக குரு என்பேன்.அடிக்கடி அவர் ‘‘முருகா’’ என்று சொல்லியபடி விபூதி பூசிக்கொள்வார்.என்னைத் தனியே அமர்த்தி பல கதைகள் கூறுவார்.பக்கத்து வீடுகளுக்கு அழைத்துச் சென்று பாடவைப்பார்.ஒவ்வொரு இறைவனின் வடிவங்களையும் விளக்கிக் கூறுவார்.பல எதிப்புகளுக்கும் இடையில் பீரோவைத் திறந்து எனக்கு வேண்டிய மண் பொம்மைகளை எடுத்துத் தருவார்,என்னுடன் விளையாடுவார்.அவரது இஷ்டமான சிவனை நான் அபிஷேகம் செய்தே கரைத்திருக்கிறேன்.

என் அப்பா எங்களை அங்கு விட்டுவிட்டுச் சென்றுவிடுவார்.ஒருமுறை அப்படிச் செல்லும் போது நான் அதீதமான அடம்பிடித்தேன்.என்னை சமாதானம் செய்ய என்ன என்னவோ தந்தார்கள்,ஆனால் நான் பெரியரங்கநாதரின் பொம்மையைக் கேட்டவுடன் என் அத்தைகள் என்னை முறைத்த முறைப்பு இன்னும் பயமாக இருக்கிறது.ஆனால் கொள்ளுப்பாட்டி என்ற ஆச்சாரியன் மூலம் ஸ்ரீரங்கநாதர் என் கைகளுக்கு வந்தார்.இரண்டே மணி நேரத்தில் அவரைத் திருப்பாற்கடலில் [தொட்டித் தண்ணீர்]படுக்க வைத்து அவருக்கே வைகுண்டப்ராப்த்தி தந்தேன் பாருங்கள்.......அப்பப்பா...அதனால் எனக்கு என் அம்மாவிடம் இருந்து கிடைத்த பிரம்புக்குச்சி மோட்சம் இருக்கிறதே......ஆஹா ஹா......
அடிக்கடி அவர் என்னை ரங்கநாதர் போலப் படுத்துக் கட்டச் சொல்வார்.சுவாமி ஐயப்பன் படத்தில் வரும் ‘‘திருப்பாற் கடலில்’’ பாடலை எனக்குக் கற்றுத் தந்தார் அவர்.
அந்த நீல நிற ரங்கனின் அழகும் ,தாயாரின் பவ்யமும் என் மனதில் இன்னும் நிலைத்து உள்ளன.அதுவே ரங்கன் என்னை அடிமைப்படுத்திய முதல் கட்டம்.பின்னாளில் என்னையும் ப்ரதீப்பையும் ஒரேடியாக தன் ஸ்ரீரங்கத்தில் மூழ்க்கடித்து விட்டானே!!!அடிக்கடி ஆச்சாரிய ஞானத்தால் எங்களைத் தன்னிடத்தில் ஆழங்கால் படுத்தி,தன் லீலாவிக்ரஹ விபூதிகளை அணுவளவேனும் அனுபவிக்கச் செய்துவருவதை என்ன என்று சொல்வேன்!?அவ்வாறு பலகாலம் ஸ்ரீரங்கத்தில், ஆச்சாரிய ஞானத்தினால் தாயாரையும் நம்பெருமாளையும் அனுபவித்து வரும் திவ்யானுபவங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.எக்குறை இருப்பினும் ஸ்ரீரங்கதிவ்யத் தம்பதிகளும் ஆச்சாரியர்களும் மன்னிக்கட்டும்!!!

ஸ்ரீரங்கத்தின் வரலாறு பற்றி பல ஆய்வுகள்,நூல்கள் வந்தபடியே உள்ளன.இக்கட்டுரைகளில் அவை மீண்டும் சொல்லப்படவில்லை.மாறாக வித்யாசமான,அழகான,சுவாரசியமான விஷயங்களும்,ஐதீஹங்களும்,சம்ப்ரதாயங்களும்,ஆன்மீக விஷயங்களும் பகிர்ந்துகொள்ளப்படுகின்றன.

நம் வீட்டுக்குள்ளேயே அற்புதமான மஹாரத்னம் ஒன்று உள்ளது.அதன் பெருமையை நாம் அறியாதது போல ,ஸ்ரீரங்கத்தின் பெருமைகளும் மறைந்து உள்ளன.

**இந்தியாவின் ஆணிவேர்:**
இந்தியாவின் ஆணிவேர் நம் குடும்பங்கள் ஆகும்.அக்குடும்ப வாழ்விற்கு அடித்தளம் போட்டுத் தருபவை ராமாயணமும் மகாபாரதமும் ஆகும்.அவை இரண்டும் குடும்ப வாழ்க்கையின் இரு

கண்கள்.குறிப்பாக கூட்டுக்குடும்பங்களும் உறவுகளும் மறைந்து வரும் அபாயமான சூழலில் மீண்டும் நாம் இவ்விரண்டு வரலாற்று இதிகாசங்களையும் வரும் தலைமுறைக்கு உரியமுறையில் எடுத்துச் சொன்னால்,மனவியல் நிபுனர்களை நாட வேண்டியதில்லை.இவற்றில் இல்லாத விஷயம் தான் எது?

அடிக்கடி என் மனம் சொல்லும்,'' தமிழ்நாட்டில் ஏன் இறைவன் தன் அவதாரங்களை எடுக்கவில்லை?''
இது ஒரு ஏக்கம்.ஆனால் பாகவதம் சொல்வதைக் கேளுங்கள்.
'' கலியுகத்தில் பல ஆச்சாரியர்களும் பரம அடியார்களும் தென் தேசத்தில்,காவிரி,தாமிரபரணி,போன்ற ஆறுகள் பாயும் பகுதிகளில் அவதாரம் செய்து மக்களை வழிப்படுத்துவர்'' என்கிறார் வியாசர்.
மகான் சொன்னது வீண் ஆகவில்லையே.ஆழ்வார்களும்,நாயன்மார்களும்,பரம பாகதவர்களும் பக்தியை ஊட்டி வாழ்ந்தது இங்கு தானே?இறைவன் ஒருபோதும் அன்பர்களுக்கு பாரபட்சம் காட்டுவதில்லை.தன் அவதாரங்களை வடநாட்டில் எடுத்த இறைவன் தான் வழிபட்ட மூர்த்திகளைத் தென்னாட்டில் ஸ்தாபித்தான்.

*ராமனின் இஷ்வாகுகுல தெய்வமான ஸ்ரீரங்கநாதன் காவிரிக்கரையில் கோயில் கொண்டான்.
*க்ருஷ்ணன் வழிபட்ட பரவாசுதேவன் கேரளத்தில் குருவாயூரில் கோயில் கொண்டார்.
*துவாரகையில் ஸ்ரீருக்மிணிதேவியார் வழிபட்ட க்ருஷ்ண விக்ரஹம் கர்நாடகத்தில் உடுப்பியில் கோயில் கொண்டு உள்ளார்.

**என்னே இறைவனின் கருணை?**

இறைவன் பரமாத்ம ரூபத்தில் எவ்வித உருவமும் குணதோஷங்களும் இல்லாத சுத்த ஞானமயமானவன்.அவனை அவ்வாறு உள்ளத்தில் வைத்து அத்வைத்த பாவத்தில் உணர எல்லோராலும் உடனே முடியாது.அதனால் தான் ஆச்சாரியர்கள் தான் த்யானித்த வடிவங்களில் கோயில்களில் ஸ்தாபித்தனர்.அந்த ரூபங்களை ''அர்ச்சா மூர்த்திகள்'' என்பர்.இந்து சமயத்தில் உருவ வழிபாடு என்பது குழந்தைக்கு ,சிங்கம் படத்தைக் காட்டி அதை உணர்த்துவதைப் போன்றது.உருவவழிபாடு என்பது ஆன்மீகப் பயணத்தின் பாஸ்போர்ட் எனலாம்.

பக்தி வழியில் இறைவனை அடைய எண்ணும் பக்தர்களுக்குக் கோயில்களும்,அர்ச்சா மூர்த்திகளும் வாழ்விற்குக் காற்றும் தண்ணீரும் உணவும் போல்வன.அவற்றுடன் பக்தன் கொண்டுள்ள அன்பும் பாசமும் பிணைப்பும் உறவும் எதார்த்த வாழ்விற்கு அப்பாற்பட்டது.அவை பரமரகசியமானது.எவர் அதை அறியக்கூடிய ஞானப்பக்குவம் பெற்றனரோ அவர்களிடமே பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்.இது தாம்பத்யத்தைவிட ரகசியமானது.

இந்துமதப் பிரிவுகளில் விஷ்ணுவை வழிபடும் வைஷ்ணவ சமயத்தில்,உருவவழிபாடு மிகவும் முக்கியம் ஆகும்.அதில் பல பிரிவுகள் உள்ளன.தென்னாட்டில் ஆழ்வார்களும் ஆச்சாரியர்களும் வளர்த்த வைஷ்ணவம் ''ஸ்ரீவைஷ்ணவம்'' என்று பெயர் பெற்றது.இந்த ஸ்ரீவைஷ்ணவப் பிரிவினை நன்கு நெறிப்படுத்தியவர் ஸ்ரீராமானுஜர்.[கி.பி.பதினோராம் நூற்றாண்டு]அதனால் இப்பிரிவினை ;;ஸ்ரீராமானுஜ தர்சனம் '' என்றும் அழைப்பர்.

**ஸ்ரீரங்கம் என்னும் ஹெட்கோட்ரஸ்**

தென்னாட்டு ஸ்ரீவைஷ்ணவசமயப்பிரிவின் ஹெட்கோட்ரஸ் ஸ்ரீரங்கமே ஆகும்.ஏன்?

தேர்தலில் அதிக ஓட்டு பெற்று வெற்றிசூடும் அரசியல்வாதிபோல்,நம் தமிழகத்தில் ஆழ்வார்கள்---நாயன்மார்களால் பாடல் பெற்ற ஊர்களுக்கு மிக உயரிய அந்தஸ்த்து தரப்படுகிறது.சிவன் கோயில்கள் நாயன்மார்களால் பாடப்பட்டன.விஷ்ணுகோயில்கள் ஆழ்வார்களால்

பாடப்பட்டன.அவ்வாறு பாடல் பெற்ற சிவன் கோயில்கள் நானூறுக்கும் மேல்.விஷ்ணுகோயில்கள் நூற்றியெட்டு.அவை ‘‘திவ்யதேசங்கள்’’ எனப்படும்.

**பாடல் பெறுதல் என்றால் என்ன?**

மிகவும் எளிமையாகச் சொல்லவேண்டும் என்றால்,இன்றைய தேர்தல் களத்தில் அரசியல்வாதிகள் செய்யும் கேன்வாசிங் தான் அடியார்கள் செய்தனர்.
*கி.பி.ஐந்தாம் -----ஒன்பதாம் நூற்றாண்டு வரையில் அடியார்கள் வாழ்ந்து இந்துசமய மறுமலர்ச்சியைத் தென்னாட்டில் கொண்டு வந்தனர்.
*அக்காலத்தில் விளங்கிய சமண--புத்த மதங்களை எதிப்பதே இவர்களின் முக்கிய பணி.
*இன்று மதம் என்ற போர்வையில் பல அரசியல் சீர்கேடுகள் உள்ளதைப் போல்,அன்று புத்த --சமண மதங்கள் அரசியலுள் புகுந்து ஏற்படுத்திய சீர்கேடுகளைத்தட்டிக் கேட்டனர் அடியார்கள்.
*ஊர் ஊராகச் சென்று சில அற்புதங்களை நிகழ்த்தி,பக்தியையும்,உண்மையான ஆன்மீக விழிப்புணர்வையும் மக்களுக்கு ஊட்டினர்.
*இசையையும்,கலையையும்,அழகான தமிழ் இலக்கியக் கூறுகளையும் கொண்டு மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர்.
*ப்ரச்சாரம் தேவையான ஊர்களுக்கே அவர்கள் சென்று பாடினர்.
*அவ்வாறு பாடப்பட்ட பாடல்கள் மிக உயர்ந்த நிலையில் மதிக்கப் படுகின்றன.,‘‘தமிழ் வேதங்கள்’’ என்று போற்றப்படுகின்றன.
*இதில் அதிகமான பாடல் பெற்ற சிதம்பரமும்---ஸ்ரீரங்கமும் சைவ--வைஷ்ணவத்தின் தலைமைப் பீடங்கள் ஆயின.
*அவ்விடங்களில் மனத்தலைவர்களும்,பாகதவர்களும்,ஆச்சாரியர்களும் குடி புகுந்தனர்.சமயத் தொண்டு செய்தனர்.
*ஆழ்வார்கள் பாடிய பாடல்கள் அதிகம் யாருக்கு ?
முதலிடம்......ஸ்ரீரங்கம்
இரண்டாமிடம்.....திருவேங்கடம்
மூன்றாமிடம்......அழகர்கோயில்

பாட்டால் மட்டுமா ஸ்ரீரங்கத்துக்குப் பெருமை?

வேறு ஏதோ இருக்கிறது......வாருங்கள் போகலாம் அடுத்த கட்டுரைக்கு.
நன்றி!